# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 04.01. 2019 | 1) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 59 அபிராமி நகரில் The Director SBI Resti என்ற நிறுவனத்தின் பெயரில் காலிமனை வரிவிதிப்பு (வரிவிதிப்பு எண். 138/059/01724) செய்யப்பட்டுள்ளது. மேற்படி வரிவிதிப்பானது 2012–2013 முதலாம் அரையாண்டு முதல் வரி நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.<br><br>இந்நிலையில், ஸ்டேட்பாங்க் RESTI தூத்துக்குடி அமைப்பின் இயக்குநரின் 23.08.2018ம் தேதிய கடிதத்தில் மனையானது தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் 08.05.2015ம் தேதிய ந.க.டி–3/5140/2013 எண்ணிட்ட செயல்முறையின் வாயிலாக பெறப்பட்டுள்ளதால் 01.04.2015 முதலாம் அரையாண்டு முதல் காலிமனை நிர்ணயம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.<br><br>மேற்படி இடமானது புல எண். 374/2பி10 1806 ச.மீ. நிலம் ஊரக சுயவேலை வாய்ப்பு பயிற்சி மையம் அமைக்க மாவட்ட ஆட்சியர் அவர்களால் 08.05.2015ம் நாளன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்கிய தேதியினை அடிப்படையாகக் கொண்டு 2015–2016 முதலாம் அரையாண்டு முதல் காலிமனை வரி நிர்ணயம் செய்திடும் பொருட்டு மேற்படி வரிவிதிப்பு எண். 138/059/01724ல் கேட்பினை திருத்தியமைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு.<br>1)காலிமனை வரி 2015–2016 முதலாம் அரையாண்டு முதல் நிர்ணயம் செய்யலாம்.<br>2) 2012–2013 முதலாம் அரையாண்டு முதல் 2014–2015 இரண்டாம் அரையாண்டு வரையிலான காலங்களுக்கு கணனியில் பதிவாகியுள்ள கேட்புத்தொகையினை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>அ2/2629/2018/தெம | 1)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட தருவைகுளம் உரக்கிடங்கு பழைய சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள oxidation pond –ஐ செம்மைபடுத்தி கழிவு நீர் விடுவதற்கு ஏதுவாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 14.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 14.12.2018 அன்று திறக்கப்பட்டது.<br><br>1. திரு. T. Murugan<br>மதிப்பீட்டை விட 0.52% குறைவு (ரூ.22,08,955.45)<br>2. திரு. J. Suresh Jeyakumar<br>மதிப்பீட்டை விட 8.16% அதிகம் (ரூ.24,01,682.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையினைவிட குறைவான தொகை குறிப்பிட்டு கொடுத்துள்ள திரு. T. Murugan என்பவரின் (மதிப்பீட்டை விட 0.52% குறைவு (ரூ.22,08,955.45) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1.பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2.மதிப்பீட்டை விட 0.52% குறைவாக கொடுத்த திரு.T. Murugan ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ம.ப.எண். 188/18–19 | 2) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| | 3) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மங்களபுரம் மைய எண் 37 விவிடி பூங்கா மைய எண் 26 பகுதிகளில் புதிதாக அங்கன்வாடி மைய கட்டிடம் அமைக்கும் பணிக்கு மற்றும் விவிடி பூங்கா மைய எண் 25 கேவிகே நகர், சாமுவேல்புரம், சத்திரம் தெரு மற்றும் சாரங்கபாணி தெரு ஆகிய பகுதிகளில் அங்கன்வாடி மைய கட்டிடம் பராமரிப்பு செய்யும் பணிக்காக ரூ 47,46,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 14.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்தின் விலைப்புள்ளி உறை 11.12.2018 அன்று திறக்கப்பட்டது.<br><br>1) M/s. Shri. Vengateswara Construction<br>மதிப்பீட்டை விட 0.33% அதிகம் ரூ. 47,29,508.99<br><br>M/s. Shri. Vengateswara Construction நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியானது (மதிப்பீட்டை விட 0.33% அதிகம் ரூ. 47,29,508.99) பொறியியல் கையேடு பிரிவு II விதி எண் எண். 2.7.2ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத் தொகையினை | 3)அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | விட கூடுதலாக 5% வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட 0.33% மட்டுமே அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் தொழிலாளர் நல வைப்பு நிதி மதிப்பீடு தொகையில் ரூ.15,643.36 குறைவாக உள்ளதால், குறைவாக உள்ள தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1)பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மதிப்பீட்டை விட 0.33 சதவிகிதம் குறைவாக கொடுத்த M/s. Shri. Vengateswara Construction நிறுவனத்தார்க்கு வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்<br>3. தொழிலாளர் நல வைப்புநிதியில் குறைவாக உள்ள தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>Est.No. 167/18-19 | |
| | 4) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்– ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி சுப்பையாபூங்கா மைய எண் 5, 7 பகுதிகளில் புதிதாக அங்கன்வாடி மைய கட்டிடம் அமைக்கும் பணிக்கு மற்றும் ரகுமதுல்லாபுரம் மைய எண் 31, 32 டூவிபுரம் பள்ளி மைய எண். 34 அழகேசபுரம் அங்கன்வாடி மைய எண்.4 ஆகிய பகுதிகளில் அங்கன்வாடி மைய கட்டிடம் பராமரிப்பு செய்யும் பணிக்காக ரூ 48,34,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 14.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்தின் விலைப்புள்ளி உறை 11.12.2018 அன்று திறக்கப்பட்டது.<br><br>M/s. Shri. Vengateswara Construction<br>மதிப்பீட்டை விட 0.18% அதிகம் ரூ. 48,05,744.37<br><br>M/s. Shri. Vengateswara Construction நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியானது (மதிப்பீட்டை விட 0.18% அதிகம் ரூ. 48,05,744.37) பொறியியல் கையேடு பிரிவு II விதி எண். 2.7.2ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத்தொகையினை விட கூடுதலாக 5% வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட 0.18% மட்டுமே அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் தொழிலாளர் நல வைப்பு நிதி மதிப்பீடு தொகையில் ரூ.11,258.20 குறைவாக உள்ளதால், குறைவாக உள்ள | 4) அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1)பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மதிப்பீட்டை விட 0.18 சதவிகிதம் குறைவாக கொடுத்த M/s. Shri. Vengateswara Construction நிறுவனத்தார்க்கு வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>3. தொழிலாளர் நல வைப்புநிதியில் குறைவாக உள்ள தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>Est.No. 168/18-19 | |
| | 5) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்– ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மங்களாபுரம் மைய எண். பகுதிகயில் புதிதாக அங்கன்வாடி மைய கட்டிடம் அமைக்கும் பணிக்கு மற்றும் ரகுமதுல்லாபுரம் மைய எண் 31, 32 டூவிபுரம் பள்ளி மைய எண். 34 அழகேசபுரம் அங்கன்வாடி மைய எண்.4 ஆகிய பகுதிகளில் அங்கன்வாடி மைய கட்டிடம் பராமரிப்பு செய்யும் பணிக்காக ரூ 48,34,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 14.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்தின் விலைப்புள்ளி உறை 11.12.2018 அன்று திறக்கப்பட்டது.<br>M/s. Shri. Vengateswara Construction<br>மதிப்பீட்டை விட 0.18% அதிகம் ரூ. 48,05,744.37<br><br>M/s. Shri. Vengateswara Construction நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியானது (மதிப்பீட்டை விட 0.18% அதிகம் ரூ. 48,05,744.37) பொறியியல் கையேடு பிரிவு II விதி எண் எண். 2.7.2ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத்தொகையினை விட கூடுதலாக 5% வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட 0.18% மட்டுமே அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் தொழிலாளர் நல வைப்பு நிதி மதிப்பீடு தொகையில் ரூ.11,258.20 குறைவாக உள்ளதால், குறைவாக உள்ள தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1)பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம். | 5) அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2)மதிப்பீட்டை விட 0.18 சதவிகிதம் குறைவாக கொடுத்த M/s. Shri. Vengateswara Construction நிறுவனத்தார்க்கு வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>3)தொழிலாளர் நல வைப்புநிதியில் குறைவாக உள்ள தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>Est.No.169/18-19 | |
| | 6) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – பொது நிதி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.5 கேடிசி நகர் டிப்போ ரோடு தார் சாலை அமைக்கும் பணிக்காக ரூ. 22,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 28.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 28.12.2018 அன்று திறக்கப்பட்டது.<br><br>1) திரு. J.Ponmani<br>மதிப்பீட்டை விட 0.53 % குறைவு (ரூ. 1834950.00)<br><br>2)திரு. M. Perumal<br>மதிப்பீட்டை விட 0.19 % குறைவு (ரூ. 1841300.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு தொகையினைவிட குறைவான தொகை கொடுத்துள்ள திரு. J.Ponmani என்பவரின் (மதிப்பீட்டை விட 0.53 % குறைவு (ரூ.18,34,950.00) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாம்ன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2) மதிப்பீட்டை விட 0.55% குறைவாக கொடுத்த திரு. J.Ponmani ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>Est. No. 246/18-19 | 6) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| | 7)தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் உள்ள 20 வார்டுகளில உயர்தரமான குடிநீர் மிகக் குறைந்த விலையில் (குறைந்தது 1000 லிட்டர் / மணிக்கு) வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் 20 இடங்களில் நிறுவும் பணிக்கு தனியார் நிறுவனங்களிடமிருந்து தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் விருப்ப கேட்பு (EOI) கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று நிறுவனங்களின் தொழில் | 7) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td colspan="3">நுட்ப உறை 20.11.2018 அன்று திறக்கப்பட்டது. அதில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட M/s. Dharana Infrastructure Ltd. நிறுவனத்தின் விலைப்புள்ளி உறை (Price Bid) 07.12.2018 அன்று திறக்கப்பட்டது அதன் விபரம்</td><td></td></tr>
<tr><td>l.No.</td><td>Description</td><td>Rate to be remitted to the Corporation (Rupees per 20 Ltr.)</td><td>Rate to be charged for sale to public (Rupees per 20 Ltr.)</td><td>Rate to be charged for sale to public (Rupees per 1 Ltr from chilling machine)</td></tr>
<tr><td>1</td><td>Establishment of 1000 Ltr/Hr. capacity community drinking water system through Reverse Osmosis with UV treatment in Thoothukudi corporation under PPP mode.</td><td>Rs. 1.00/-</td><td>Rs. 6.90</td><td>Rs. 1.00</td></tr>
<tr><td></td><td colspan="3">மேற்கண்டவாறு விலை விகிதம் கொடுத்துள்ளனர். எனவே மேற்கண்ட பணியின் அவசியம் கருதி மேற்கண்ட விலை விகிதத்த ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1) பணியின் அவசியம் கருதி விருப்ப கேட்பு (EOI) கோரியதை மாமனறம் அனுமதிக்கலாம்.<br>2) M/s. Dharana Infrastructure Ltd நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>E2/3718/2018</td><td></td></tr>
<tr><td></td><td colspan="3">8)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்–ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி தனசேகரன் நகர் பூங்கா, முத்தம்மாள் காலனி பூங்கா தமிழ்நாடு ஹைவுசிங்போர்டு யூனிட் 1 தமிழ்நாடு ஹவுசிங் போர்டு யூனிட், II மேக்கார்டன் பூங்கா, சென்ட்மேரீஸ் காலனி பூங்கா, நல்ல பெருமாள் பூங்கா (WGC Road) VVD OHT பூங்கா லயன்ஸ்வுன் 5வது தெரு பூங்கா ஆகிய பகுதிகளில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தும் பணி செய்து 3 ஆண்டுகள் பராமரிப்பு செய்யும் பணிக்காக ரூ. 4,06,30,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 06.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட இரண்டு நிறுவனத்தின் விலைப்புள்ளி உறை 13.12.2018 அன்று திறக்கப்பட்டது.<br><br>1) M/S. Sri Sivaram Construction<br>மதிப்பீட்டை விட 9.90% அதிகம் (ரூ. 3,72,70,175.00)<br><br>2)M/S. Tetrad Projects<br>மதிப்பீட்டை விட 13.70% அதிகம் (ரூ. 8,85,57,094.00)</td><td>8) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனும்திக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள M/S. Sri Sivaram Construction என்பவரின் (மதிப்பீட்டை விட 9.90% அதிகம் (ரூ. 3,72,70,175.00) ஒப்பந்தப்புள்ளியிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது.<br><br>. M/S. Sri Sivaram Construction<br>மதிப்பீட்டை விட 13.70% அதிகம் (ரூ. 3,55,89,340.00) கொடுத்துள்ளனர்.<br><br>M/S. Sri Sivaram Construction நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியானது (மதிப்பீட்டை விட 4.94% அதிகம் (ரூ.3,55,89,340.00) பொறியியல் கையேடு பிரிவு II விதி எண் 2.7,2 ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத்தொகையினை விட கூடுதலாக 5% வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2) மதிப்பீட்டை விட 4.94% அதிகமாக கொடுத்த M/S. Sri Sivaram Construction நிறுவனத்தார்க்கு வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>Est.No.419E/18- | |
| | 9) 13.03.2018ஆம் நாளைய தூத்துக்குடி மாமன்ற தீர்மானம் எண்.45ல் இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட குரூஸ்புரம் சமுதாய கூட கட்டிடத்தினை அரசு இசைப்பள்ளியினை இலவசமாக நடத்திடவும் மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் இருந்து தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு இலவசமாக இசை கற்றுத்தரப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்படைக்கப்பட்டது.<br><br>எனினும் மாவட்ட இசைப்பள்ளி தலைமை ஆசிரியை தூத்துக்குடி அவர்களின் 18.12.2018ஆம் நாளை கடிதத்தில் மாவணர்வர்களின் நலன் கருதி மேற்படி இசைப்ள்ளியானது தூத்துக்கடி டவுண் 40அ, வி.வி.டி. சாலை டுவிபுரம் 11ம் தெரு என்ற முகவரியை 7.12.2018 முதல் இயங்கி வருவதால் மேற்படி நலக்கூட கட்டிடத்தினை 18.12.2018 முதல் ஒப்படைக்க இசைவு தெரிவத்து கடிதம் வழங்கப்பட்டு இக்கூட்டத்தின் பொறுப்புகள் 20.12.2018முதல் மாநகராட்சியால் பொறுப்பு எடுத்துக்கொள்ளப்பட்டது.<br><br>இந்நிலையில் தூத்துக்குடி மாவட்டத்தில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின கீழ் சுய உதவிக்குழுக்கள், | 9) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அமைக்கப்பட்டுள்ளதாகவும் சுய உதவிக் குழுக்கள் ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி மற்றும் உறுப்பினர்களுக்கான பயிற்சி நடத்திட மேற்படி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட குருஸ்புரத்தின் சமதாய நலக்கூடத்தினை தங்களுக்கு ஒதுக்கீடு செய்து கொடுக்க 17.12.2018ஆம் நாளைய திட்ட இயக்குநர், மாவட்ட இயக்குநர் மேலாண்மை அலகு அவர்களால் கோரப்பட்டுள்ளது.<br><br>எனவே கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் திட்ட இயக்குநர், தூத்துக்குடி அவர்களுக்கு மேற்படி கூடத்தினை இலவசமாக வழங்கிட மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1) கட்டிடம் மற்றும் கட்டிட வளாகத்தினை முறையாக பராமரிக்க செய்தல் வேண்டும்.<br><br>2) அனுமதிக்கப்பட்ட பயன்பாட்டினை தவிர்த்து வேறு எவ்வகையான பயன்பாட்டிற்கும் இக்கூட்டத்தினை உபயோகப்படுத்துதல் கூடாது.<br><br>3) கட்டிடத்தினை மாநகராட்சி பயன்பாட்டிற்கு தேவை என்ற நிலையில் 2 வார காலக்கெடுவிற்குள் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காமல் மாநகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும்.<br><br>**அலுவலலகக் குறிப்பு** – மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>அ16/524/2017 | |
| | 10) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள வடக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள முத்துநகர் பூங்கா கடற்கரை பகுதியில் நீர் விளையாட்டுகள் விளையாடும் வகையில் கடற்கரை விளையாட்டு மையம் அமைத்து விளையாட்டு சாதனங்களை இயக்கவும், இயக்குவதற்கும் மாநகராட்சியில் வருடாந்திர அடிப்படையில் நிர்மானிக்கப்படும் தொகையினை பயணிகளிடமிருந்து வசூல் செய்து கொள்ளவும் விருப்பமான நிறுவனங்களிடமிருந்து தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் 28.12.2018 ஒப்புதல் கீழ்க்கண்டவாறு ஒரே ஒரு விருப்ப கேட்பு மனு வரப்பெற்றது. அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்க்கண்டவாறு<br>1. M/s. Holy Island water sports- Rs. 2,00,999/-<br><br>வரப்பட்ட விருப்ப கேட்பு மனுவில் M/s. Holy Island water sports நிறுவனம் மாநகராட்சிக்கு ஒரு வருடத்திற்கு ரூ 2,00,999.00 வழங்க ஒப்புக்கொண்டுள்ளனர் இதை ஏற்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ5/00119/1/2018 | 10) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **11)** தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் முதிர்ந்த கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் Malathion Technical Grade 95% என்கிற மருந்தினை கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் நிறுவனத்தின் அனுமதி பெற்ற M/s Coromandel International Limited நிறுவனத்தின் மூலம் ஒரு லிட்டர் ரூ. 369/– +18 சதவீதம் GST வீதம் 2000 லிட்டர் வாங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்காகும் செலவுத் தொகை ரூ 8,70,840/– யை பொது நிதியிலிருந்து ஏற்பதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்<br>எச்.2/7958/13 | **11)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | **12)**தூத்துக்குடி மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 124 நாள் 20.07.2018ல் தற்போது தூத்துக்குடி மாநகராட்சிக்கு உள்ளூர் வழக்கறிஞராக பணிபுரிந்து வரும் திரு. கோமதி மணிகண்டன் என்பவரின் பதவிக் காலத்தினை 01.06.2018 முதல் அடுத்த 6 மாத காலத்திற்கு நீடிப்பு செய்து கொடுக்க தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில் இவரது பதவிக் காலத்தினை நிர்வாக நலன் கருதி 01.12.2018 முதல் 31.05.2019 முடிய மேலும் ஆறுமாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்வது தொடர்பாக மாமன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்.<br>சி1/13512/2004 | **12)** அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| | **13)** உலக வங்கி (World Bank) தமிழ்நாடு நகர்புற நிதி ஆதார வளர்ச்சி திட்டம் (TNUSDP) மற்றும் ஸ்மார்ட்சிட்டி திட்டத்தின் கீழ் சிப்பம் 5 தூத்துக்குடி மாநகராட்சி செங்குளம் ஓடை முதல் உப்பாறு வரை தேசிய நெடுஞ்சாலை எண் 7 வழியாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் அதனை சார்ந்த பணிக்காக ரூ 63,87,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 04.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 18.12.2018 அன்று திறக்கப்பட்டது.<br><br>1) M/S. Sri Sivaram & Co.,<br>மதிப்பீட்டை விட 9.82% அதிகம் (ரூ. 58,62,61,470.00)<br><br>2)M/S. RPP Infra Projects Ltd.,<br>மதிப்பீட்டை விட 13.65% அதிகம் (ரூ. 61,73,79,860.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகை கொடுத்துள்ள M/S. Sri Sivaram & Co., என்பவரின் ஒப்பந்தப்புள்ளியானது (மதிப்பீட்டை விட 9.82% அதிகம் (ரூ. 58,62,61,470.00) மேலும் பொறியியல் கையேட பிரிவு ஐஐ விதி எண். 2.72 ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத் தொகையினை விட கூடுதலாக 5% வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பிட்டுத் தொகையினை விட 9.82% அதிகமாக (2018–19 தர விலையின் படி) குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி பணி | **13)** அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | திட்டப்பணியாக இருப்பதன் அவசியத்தை முன்னிட்டும் கட்டுமான பொருள்களின் மார்கெட் விலைகள் மாற்றி தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தினை கணக்கீடு செய்யும் போது முறையான காரணங்காளக (Reasonable cost) கருதப்படுவதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கும் போது இதைவிட குறைவாக வரும் வாய்ப்புகள் இல்லாததாலும் ஒப்பந்தப்புள்ளியை நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி வழங்கல் குழுவிற்கு பரிந்துரை செய்து பிரேரணைகள் அனுப்பி ஒப்புதல் பெற மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>தற்போது மதிப்பீட்டு தொகையில் அனுமதிக்கப்பட்டது போக கூடுதல் தொகை ரூ 9,35,84,650/– மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்க பிரேரணைகள் அனுப்பி வைக்கவும் மேற்படி அனுமதி பெறப்படாத நிலையில் பொது நிதியிலிருந்து ஈடு செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1)மதிப்பீட்டை விட 9.82% அதிகமாக கொடுத்த M/S. Sri Sivaram & Co., ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதக்காக நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி வழங்கல் குழுவிற்கு பரிந்துரை செய்து பிரேரணைகள் அனுப்பி வைக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2) கூடுதல் செலவின தொகை (ரூ. 9,35,84,690/–) மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்க பிரேரணைகள் அனுப்பி வைக்கவும் மேற்படி அனுமதி பெறப்படாத நிலையில் பொது நிதியிலிருந்து ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209/2015 | |
| | 14) உலக வங்கி (World Bank) தமிழ்நாடு நகர்புற நிதி ஆதார வளர்ச்சி திட்டம் (TNUSDP) மற்றும் ஸ்மார்ட்சிட்டி திட்டத்தின் கீழ் சிப்பம் 1 தூத்துக்குடி மாநகராட்சி காலாங்கரை ஓடை முதல் பெரியபள்ளம் ஓடை வரை தேசிய நெடுஞ்சாலை 45B ல் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் அதனை சார்ந்த பணிக்காக ரூ 69,66,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 04.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 18.12.2018 அன்று திறக்கப்பட்டது.<br><br>1) M/S. JS Associates Development India Pvt Ltd..,<br>மதிப்பீட்டை விட 9.79% அதிகம் (ரூ. 65,56,07,795.00)<br><br>2)M/S. RPP Infra Projects Ltd.,<br>மதிப்பீட்டை விட 15.16% அதிகம் (ரூ. 68,76,51,210.00) | 14) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகை கொடுத்துள்ள M/S. JS Associates Development India Pvt Ltd.., என்பவரின் ஒப்பந்தப்புள்ளியானது (மதிப்பீட்டை விட 9.79% அதிகம் (ரூ.65,56,07,795.00) மேலும் பொறியியல் கையேடு பிரிவு II விதி எண். 2.72 ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத் தொகையினை விட கூடுதலாக 5% வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பிட்டுத் தொகையினை விட 9.79% அதிகமாக (2018–19 தர விலையின் படி) குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதன் அவசியத்தை முன்னிட்டும் கட்டுமான பொருள்களின் மார்கெட் விலைகள் மாற்றி தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தினை கணக்கீடு செய்யும் போது முறையான காரணங்காளக (Reasonable cost) கருதப்படுவதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கும் போது இதைவிட குறைவாக வரும் வாய்ப்புகள் இல்லாததாலும் ஒப்பந்தப்புள்ளியை நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி வழங்கல் குழுவிற்கு பரிந்துரை செய்து பிரேரணைகள் அனுப்பி ஒப்புதல் பெற மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>தற்போது மதிப்பீட்டு தொகையில் அனுமதிக்கப்பட்டது போக கூடுதல் தொகை ரூ 6,54,77,671/– மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்க பிரேரணைகள் அனுப்பி வைக்கவும் மேற்படி அனுமதி பெறப்படாத நிலையில் பொது நிதியிலிருந்து ஈடு செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1)மதிப்பீட்டை விட 9.79% அதிகமாக கொடுத்த M/S. JS. Associates Development India Pvt Ltd., ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்காக நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி வழங்கல் குழுவிற்கு பரிந்துரை செய்து பிரேரணைகள் அனுப்பி வைக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2) கூடுதல் செலவின தொகை (ரூ. 6,54,77,671/–) மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்க பிரேரணைகள் அனுப்பி வைக்கவும் மேற்படி அனுமதி பெறப்படாத நிலையில் பொது நிதியிலிருந்து ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209/2015 | |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். 04.01.2019